ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 5) Sep 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

> கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
> செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
> எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
> சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## அடியேன் உரை

கடந்த நம்பெருமாள் விஜயம் இதழுக்கு அரங்கனின் கடாக்ஷம் கிட்டியது என்றே கூற வேண்டும். கடந்த இதழானது திருவரங்கத்தில் நம்பெருமாளின் திருவடிகளிலும், பெரியபெருமாளின் திருவடிகளிலும், ஸ்ரீரங்கநாச்சியாரின் திருவடிகளிலும், எம்பெருமானாரின் திருவடிகளிலும் ஸமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாக, நம்பெருமாள் பவித்ரோத்ஸவம் கண்டருளிக் கொண்டிருந்த பவித்ரோத்ஸவ மண்டபத்தில், அவனது திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு, திருவரங்கம் ஸ்ரீமாந் முரளி பட்டர் ஸ்வாமிக்கு அடியேன் தலையல்லால் கைம்மாறிலேனே.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் ... வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

# உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
(பகுதி – 5)

41. பூர்வேண தாம் தத்வத் உதார நிம்ந ப்ரஸந்நசீத ஆசய மக்ந நாதா:
பராங்குச ஆத்யா: ப்ரதமே புமாம்ஸ: நிஷேதிவாம்ஸ: தச மாம் தயேரந்

பொருள் – சந்த்ர புஷ்கரிணியின் கிழக்குத் திசையில் நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் எழுந்தருளியுள்ளனர். அவர்கள் சந்த்ர புஷ்கரிணியைப் போன்றே தாராள குணம், கம்பீரம், தெளிவு, குளிர்ச்சி ஆகியவற்றைக் கொண்டவர்களாக உள்ளனர். அவர்கள் தங்கள் இதயத்தில் நம்பெருமாளை எப்போதும் கொண்டவர்களாக உள்ளனர். இப்படிப்பட்ட ஆழ்வார்கள் என் மீது கருணை பொழிவார்களாக.

42. ஆதாரசக்திம் உபரி ப்ரக்ருதிம் பரேண தாம்
கூர்மம் அத்ர பணிநம் ப்ருதிவீம் ப்பணாஸு
ப்ருத்த்யாம் பயோதிம் அதிதத் நளிநம்
நிதாய ஸ்ரீரங்க தாம ஸந்நிவிஷ்டம் அபிஷ்டவாநி

பொருள் – (அடுத்த நான்கு ச்லோகங்கள் மூலம் ஸ்ரீரங்கவிமானத்தைத் துதிக்கிறார்) அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது பகவத் சக்தியாகும். இதனை முதலில் வைத்து, அதன் மீது இந்தப் ப்ரக்ருதி மண்டலம் வைக்கப்பட்டுள்ளது. ப்ரக்ருதி மண்டலத்தின் மீது கூர்மமும், கூர்மத்தின் மீது ஆதிசேஷனும் வைக்கப்பட்டுள்ளது. ஆதிசேஷனின் படங்கள் (தலைகள்) மீது பூமி வைக்கப்பட்டுள்ளது. பூமியின் மீது ஸமுத்ரம் உள்ளது. ஸமுத்ரத்தின் மீது எட்டு தளங்கள் கொண்ட தாமரை உள்ளது. அந்தத் தாமரை மீது ஸ்ரீரங்கவிமானம் உள்ளது. இவ்விதம் எப்போதும் விளங்கவல்ல ஸ்ரீரங்கவிமானத்தை நான் துதிப்பேனாக.

43. பரேண நாகம் புரி ஹேமமய்யாம் ய:
ப்ரஹ்மகோச: அஸ்தி அபராஜிதா ஆக்க்ய:
ஸ்ரீரங்க நாம்நா தம் அபௌருஷேயம்
விமாநராஜம் புவி பாவயாநி

பொருள் – ஸ்வர்க்கலோகத்திற்கும் அப்பால் உள்ளது, பொன்மயமான நகரமாக உள்ளது, அபராஜிதா என்ற பெயர் கொண்டது – இப்படிப்பட்டதாக பரப்ரஹ்மத்தின் இருப்பிடம் உள்ளது. அந்த இருப்பிடமானது, மனிதர்களால் செய்யப்படாததாக இந்தப் பூமியில், மிகவும் சிறப்புடைய ஸ்ரீரங்கவிமானமாக வந்தது என்று நான் எண்ணக் கடவேன்.

44. அநாதி ஆம்நாதத்வாத் புருஷரசநா தோஷரஹிதம்
ஜநே தாம்ஸ்தாந் காமாந் விதததத் அபி ஸாயுஜ்ய ஹ்ருதயம்
அஸந்தேஹ அத்யாஸம் பகவத் உபலம்ப ஸ்த்தலம் அமீ
ப்ரதீம: ஸ்ரீரங்கம் ச்ருதிசத ஸமாநருத்தி சரணம்

பொருள் – யாராலும் செய்யப்படாமல் உள்ளது என்று வேதங்கள் கூறப்படுவது போன்று, ஸ்ரீரங்கவிமானமும் யாராலும் செய்யப்படாமல் ஸ்வயமாகவே தோன்றியது. மனிதர்களால் செய்யப்படாததால் வேதங்களுக்கு, மனிதர்கள் இயற்றும் நூல்களுக்கு உள்ள தோஷங்கள் ஏதும் இல்லாமல் உள்ளது. இது போன்றே ஸ்ரீரங்கவிமானமும் தோஷங்கள் அற்றதாக உள்ளது. பலவகையான ஆசைகளை நிறைவேற்றும் முறைகளை உபதேசிப்பதாக உள்ளபோதிலும் வேதங்கள், மோக்ஷ

புருஷார்த்தத்தை உபதேசிப்பதிலேயே குறியாக உள்ளன. இது போன்று தன்னை வணங்குபவர்களுக்கு ஏற்றதை ஸ்ரீரங்கவிமானம் அளித்தாலும், மோக்ஷ புருஷார்த்தம் அளிப்பதையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. சிறிதும் சந்தேகம் இல்லாதபடி எம்பெருமானை வேதங்கள் நமக்குக் காண்பித்துக் கொடுக்கின்றன. இது போன்று ஸ்ரீரங்கவிமானமும் பெரியபெருமாளை நமக்குக் காண்பித்துக் கொடுக்கிறது. இப்படியாக வேதங்களுடன் பலவகையிலும் ஒத்து இருக்கும் ஸ்ரீரங்கவிமானத்தை நாம் நமது புகலிடமாகக் கொள்வோமாக.

45. அபி பணிபதிபாவாத் சுப்ரம் அந்த: சயாளோ:
மரகத ஸுகுமாரை: ரங்கபர்த்து: மயூகை:
ஸகல ஜலதி பாநச்யாம ஜீமுதஜைத்ரம்
புளகயதி விமானம் பாவநம் லோசநே ந:

பொருள் – ஸ்ரீரங்கவிமானம் என்பது ஆதிசேஷனின் ஸ்வரூபமாக உள்ளதால் வெண்ணிறமாக உள்ளது. ஆயினும் அதன் உள்ளே சயனித்துள்ள ஸ்ரீரங்கராஜனின் மரகதம் போன்ற நிறம் காரணமாக, அந்த அழகிய மணவாளனின் திருமேனி ஒளி காரணமாக, கடல் நீர் அனைத்தையும் முழுவதுமாகப் பருகிக் கறுத்த மேகம் போன்றுள்ளது. இப்படியாக மிகவும் தூய்மையான ஸ்ரீரங்கவிமானம், நமது கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்து, மயிர்க்கூச்சல் எடுக்க வைக்கிறது.

46. வ்யாபி ரூபம் அபி கோஷ்பதயித்வா
பக்த வத்ஸல தயா உஜ்ஜிதவேலம்
தத் த்விஷந்தரூப ந் ருகேஸரி ரூபம்
கோபுர உபரி விஜ்ரும்பிதம் ஈடே

பொருள் – (ஸ்ரீரங்கநாச்சியார் சன்னதிக்கு முன்பாக உள்ள மேட்டு அழகியசிங்கரை அடுத்த இரு ச்லோகங்களில் துதிக்கிறார்) தனது மிகவும் பெரிய திருவடிவை, மாட்டின் குளம்பு போன்று மிகவும் சிறியதாக சுருக்கிக் கொண்டு, ப்ரஹ்லாதனுக்காகத் தூண்களில் நிறைந்தான். இப்படிப்பட்டவனும், உயர்ந்த கோபுரத்தின் மீது அமர்ந்தவனும், ப்ரஹ்லாதன் மீது கொண்ட வாத்ஸல்யம் காரணமாக வரம்பு மீறி அவதாரம் செய்தவனும், விரோதியான இரண்யகசிபு போன்றவர்களை அழிப்பவனும் ஆகிய நரஸிம்ஹனை நான் துதிக்கிறேன்.

47. அஹம் அலம் அவலம்ப: ஸீததாம் இதி அஜஸ்ரம்
நிவஸத் உபரிபாகே கோபுரம் ரங்கதாம்ந:
க்வசந ந் ரு பரிபாடீ வாஸிதம் க்வாபி ஸிம்ஹ
க்ரம ஸுரபிதம் ஏகம் ஜ்யோதி: அக்ரே சகாஸ்தி

பொருள் – ஸம்ஸாரத்தில் சிக்குண்டு தவிப்பவர்களுக்கு, அவர்களுக்கு ஏற்ற கைப்பிடி அளிக்கும் துணையாக நானே உள்ளேன் என்று அறிவிப்பது போன்று, ஸ்ரீரங்கத்தின் அனைத்து கோபுரங்களையும்விட உயர்ந்த மேட்டுக்கோபுரத்தில் வசிப்பதும், ஒரு பகுதியில் மனித வடிவமாக உள்ளதும், மற்றொரு பக்கத்தில் சிங்க வடிவமாக உள்ளதும், ஒரே ஜ்யோதியாக உள்ளதும் ஆகிய வடிவம் எனது கண் முன்பாக நிற்கிறது.

48. ஸம்சோத்ய பாவந மநோஹர த்ருஷ்டிபாதை:
தேவாய மாம் அபி நிவேதயதாம் குரூணாம்
ஸவ்ய உத்தரே பகவத: அஸ்ய கடாக்ஷவீக்ஷா
பங்க்திம் ப்ரபத்ய பரித: பரித: பவேயம்

பொருள் – தூய்மை என்பதே சிறிதும் இல்லாத என்னை, தங்களது தூய்மையும் மங்களமும் நிறைந்த பார்வை மூலம் கடாக்ஷம் செய்து, பகவத் கைங்கர்யத்துக்கு ஏற்றவனாகும்படிச் செய்தனர், இவர்கள் யாரென்றால் பெரியபெருமாளின் இடது புறத்திலும், வடக்குப் புறத்திலும் உள்ள ஆசார்யர்கள் ஆவர். அவர்களது கடாக்ஷங்களை நான் சரணமாகக் கொண்டு, அவர்களை வலம் வருவேனாக.

49. ஸ்ரீரங்கராஜ கர நம்ரித சாகிகாப்ய:
லக்ஷ்ம்யா ஸ்வஹஸ்த கலித ச்ரவண அவதம்ஸம்
புந்நாக தல்லஜம் அஜஸ்ர ஸஹஸ்ரகீதீ
ஸேக உத்த்த திவ்ய நிஜ ஸௌரபம் ஆமநாம:

பொருள் – (சந்த்ர புஷ்கரிணியின் கரையில் உள்ள ஸ்தல வ்ருக்ஷமான புன்னை மரத்தைக் கூறுகிறார்) ஸ்ரீரங்கராஜனின் திருக்கரங்களால் ஸ்ரீரங்கநாச்சியாருக்காக வளைக்கப்பட்ட கிளைகள் கொண்டது, அவ்விதம் வளைக்கப்பட்ட கிளைகளில் உள்ள அழகான மலர்கள் ஸ்ரீரங்கநாச்சியாரால் கொய்யப்படுவது உண்டு, இதன் கீழ் அமர்ந்தபடி எப்போதும் திருவாய்மொழி ஓதுவதால், அந்தப் பாசுரங்களின் நறுமணம் இதன் மீது பரவி உள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த புன்னை மரத்தை நாம் துதிக்கக் கடவோம்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 5)

## அதிகரணம் – 4 – தத் ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம்

மேலே கிளம்பும் ஜீவன், ஆகாயம் போன்றவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் என்று நிருபிக்கப்பட உள்ளது.

### 3–1–22 தத்ஸ்வாபா வ்யாபத்தி: உபபத்தே:

பொருள் – ஜீவன் ஆகாயம் போன்றவற்றின் ஸ்வபாவம் (தன்மை) அடைகிறான் என்று கூறுவதே பொருந்துகிறது.

பாஷ்யம் – யாகம் போன்ற புண்ணிய கர்மங்கள் இயற்றிய அதிகாரிகள், பூத சூக்ஷமங்களுடன் கூடியவர்களாக, தங்கள் கர்ம பலன்களின் மீதத்துடன் செல்வதை முன்னர் கண்டோம் . இவ்விதம் சென்று மீண்டும் திரும்பும் வரிசையை சாந்தோக்ய உபநிஷத் (5–10–5, 6) – அத ஏதம் ஏவ அத்வாநம் புந: நிவர்த்தந்தே யத் ஏதம் ஆகாசம், ஆகாசாத் வாயும் வாயு: பூத்வா தூமோ பவதி, தூமோ பூத்வா அப்ரம் பவதி, அப்ரம் பூத்வா மேகோ பவதி, மேகோ பூத்வா ப்ரவர்ஷதி – சந்த்ர மண்டலத்தை எந்த மார்க்கத்தில் அடைந்தனரோ, அதே வழியில் இறங்குகின்றனர், புகையில் இருந்து நீர் கொண்ட மேகம் ஆகிறான், நீர் மேகத்தில் இருந்து மழை மேகம் ஆகிறான், மழை மேகம் மூலம் மழையாக பூமியில் விழுகிறான் – என்று கூறியது.

ஆராயப்படும் விஷயம் – இங்கு ஆகாயம் ஆகிறான் என்று கூறப்பட்டதன் பொருள் என்ன? மனிதன், தேவர்கள் போன்று உடல் அடையும்போது, ஆகாய சரீரம் கிட்டுகிறதா அல்லது ஆகாயத்துடன் தொடர்பு மட்டுமே ஏற்படுகிறதா?

பூர்வபக்ஷம் – இறங்கி வரும்போது சிரத்தை என்ற நிலையை உடைய ஜீவன், ஸோமராஜா என்ற சரீரம் எடுப்பது போன்று, ஆகாயம் முதலான சரீரங்களே எடுக்கிறான்.

ஸித்தாந்தம் – இது தவறு. ஆகாயத்துடன் தொடர்பு மட்டுமே கொள்கிறான். தத் ஸ்வாபாவ்யாபதி என்றால் தொடர்பு என்றே பொருள் ஆகும், பிரித்துப் பார்த்து உணர இயலாத நிலை என்பதாகும். எப்படி? ஸோமராஜா, மனித சரீரம் போன்றவற்றை எடுப்பது சுகதுக்கங்களை அனுபவிக்கவே ஆகும். ஆனால் ஆகாய சரீரம் என்பதில் இப்படிப்பட்ட சுகதுக்க அனுபவங்கள் என்பது இல்லை. ஆகவே அவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் அன்றி, அவையாகவே சரீரம் எடுப்பதில்லை.

## அதிகாரணம் – 5 – நாதிசிராதிகரணம்

ஆகாயம் போன்றவற்றில் ஜீவன் சிறிது காலம் மட்டுமே தங்கிவிட்டுக் கிளம்புகிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

### 3–1–23 நாதிசிரேண விசேஷாத்

பொருள் – நீண்ட காலம் இருப்பதில்லை, இவ்விதமே கூறப்பட்டது.

பாஷ்யம் – தூமாதி மார்க்கமாக இறங்கும் ஜீவன், ஆகாயம் தொடங்கி உணவு (அரிசி எனலாம்) முதலாவைற்றில் தங்கியபடி உள்ளான்.

ஆராயப்படும் விஷயம் – இவ்விதமாக வரும் ஜீவன், ஒவ்வொரு இடத்திலும் (ஆகாயம் முதலான இடங்கள்) நீண்ட நாட்கள் தங்கியுள்ளானா? அல்லது எத்தனை காலம் அந்த இடங்களில் தங்க வேண்டும் என்ற விதிமுறை ஏதும் இல்லையா?

பூர்வபக்ஷம் – இது போன்ற விதிமுறை ஏதும் கூறப்படாத காரணத்தினால், ஒவ்வொரு இடத்திலும் இத்தனை காலம் தங்குகிறான் என்று கூற இயலாது. அது போன்ற விதிமுறைகளும் இல்லை.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. நீண்ட காலம் தங்குவதில்லை என்பதே உண்மையாகும். எப்படி அறியலாம்? இதனை உபனிஷத் குறிப்பிட்டுக் காட்டுகிறது. அரிசி முதலான தானியங்களை அடைந்த ஜீவன், அவற்றில் இருந்து மிகவும் சிரமப்பட்டு வெறியேறுகிறான் என்று கூறப்பட்டது. இதனை சாந்தோக்ய உபனிஷத் (5–10–6) – அதோவை கலு துர்நிஷ்ப்ரபதரம் – மிகவும் சிரமத்துடன் வெளியேறுகிறான் – என்றது. இப்படியாகத் தானியம் முதலானவற்றில் இருந்து நீண்ட காலம் சிரமப்பட்டு வெளியேறுகிறான் என்று கூறப்பட்டதால், இதற்கு முந்தைய இடங்களான ஆகாயம் போன்றவைகளில் இருந்து குறுகிய காலத்தில் வெளியேறுகிறான் என்றே கூற வேண்டும். துர்நிஷ்ப்ரபதரம் என்றால் சிரமத்துடன் வெளியேறுதல் என்பது ஆகும். உபநிஷத்தில் துர்நிஷ்ப்ரபதரம் என்பதில் – த – என்பது விடப்பட்டது காண்க.

## அதிகரணம் – 6 – அங்யாதிஷ்டித அதிகரணம்

### 3–1–24 அங்யாதிஷ்டிதே பூர்வவத் அபிலாபாத்

பொருள் – வேறு ஜீவன்களுடன் தொடர்பு மட்டுமே கொண்டுள்ளான். இவ்விதமே கூறப்பட்டது.

பாஷ்யம் – பூமிக்கு இறங்கி வரும் ஜீவன்கள், நெல் போன்ற தானியங்களாகப் பிறப்பது பற்றி சாந்தோக்ய உபநிஷத் (5–10–6) – மேகோ பூத்வா ப்ரவர்ஷதி த இஹ வ்ரீஹியவா ஔஷதி வனஸ்பதய: திவமாஷா இதி ஜாயந்தே – மேகமாகி பின்னர் மழையாகிறான், அதன் பின்னர் நெல், கோதுமை, மூலிகைகள், செடிகள், எள், உளுந்து போன்றவையாகப் பிறக்கிறான் – என்று கூறியது.

ஆராயப்படும் விஷயம் – இவ்விதம் இறங்கும் ஜீவன்கள், தானியம் போன்றவற்றைத் தங்கள் உடலாகக் கொண்டு, அவைகளாகவே பிறக்கின்றனரா? அல்லது அவற்றை உடலாகக் கொண்டுள்ள மற்ற ஜீவன்களுடன் தொடர்பு மட்டுமே கொள்கின்றனரா?

பூர்வபக்ஷம் – ஸ்ருதியில் உள்ள ஜாயந்தே என்ற பதம் பிறக்கிறான் என்ற பொருளில் வந்துள்ளது. தேவோ ஜாயந்தே (தேவனாகப் பிறக்கிறான்), மனுஷ்யோ ஜாயந்தே (மனிதனாகப் பிறக்கிறான்) என்று கூறுவது போன்றே இங்கும் கூறப்பட்டது. ஆக தாவர உடல்களுடனேயே பிறக்கிறான் என்றே கொள்ளவேண்டும்.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. நெல் போன்றவையாக உள்ள மற்ற ஜீவன்களின் தொடர்பு மட்டுமே கொண்டுள்ளான். எப்படி? இதற்கு முன்பு ஆகாயம் தொடங்கி, மழைமேகம் வரை எவ்விதம் அவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் என்று கூறப்பட்டதோ, அது போன்றே இங்கும் பொருள் கொள்ளவேண்டும். ஒரு சரீரம் (உடல்) எடுத்து, அத்தகைய நிலைக்கான கர்மம் பற்றி, ஸ்ருதி வரிகள் தெளிவாகவே கூறுகின்றன. உதாரணமாக, சாந்தோக்ய உபநிஷத் (5–10–7) – ரமணீய சரணா: கபூய சரணா: – சிறந்த ஒழுக்கம் உடையவர்கள், பாவம் உள்ளவர்கள்– என்று கூறியது. இங்கு நெல் போன்ற உடல் எடுக்கக் காரணமாக உள்ள கர்மத்தைப் பற்றிக் கூறியிருக்கவேண்டும். ஆனால் ஆகாயம் போன்றவற்றில் எவ்விதம் கர்மம் பற்றிக் கூறப்படவில்லையோ, அது போன்று இங்கும் கூறப்படாத

காரணத்தினால், ஆகாயம் போன்றே இங்கும் தானியங்கள் போன்றவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் என்று கூற வேண்டும்.

இந்த ஜீவனுக்குப் பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்கள் அனைத்தும் சந்த்ர மண்டலத்தில் கழிந்து விடுகின்றன. அடுத்த பலன் அளிக்கவல்ல கர்மங்கள், இவன் பஞ்சமாஹுதிக்குப் பின்னர் எடுக்க உள்ள உடலில் மட்டுமே பலன் அளிக்கும். இடைப்பட்ட காலகட்டத்தில், பலன் அளிக்கவல்ல கர்மங்கள் என்று ஏதும் இல்லை. ஆகவே தானியங்களாகப் பிறக்கிறான் என்பதன் மூலம், ஆகாயம் போன்றவற்றில் கூறப்பட்டது போன்று, தொடர்பு மட்டுமே கொள்கிறான் என்பதே உணர்த்தப்பட்டது.

### 3–1–25 அசுத்தம் இதி சேத் ந சப்தாந்

பொருள் – அசுத்தமான கர்மங்கள் என்பதால் – இவ்விதம் கூறுவது பொருந்தாது, அவற்றை சாஸ்திரம் கூறுகிறது.

பூர்வபக்ஷம் – நீங்கள் (ஸித்தாந்தவாதி) கடந்த சூத்திர ஸித்தாந்தத்தில் கூறுவது போன்று இன்ப–துன்பங்களை அனுபவிக்கும் நிலைக்குக் காரணமான கர்மம் கூறப்படவில்லை, ஆகவே நெல் போன்றவற்றுடன் தொடர்பு மட்டுமே கொள்கின்றனர், அவற்றை உடலாகக் கொண்டு பிறப்பதில்லை என்று கூறும் வாதம் ஏற்க இயலாது. இதன் காரணம் – நெல் போன்றவையாகப் பிறந்து, இன்ப–துன்பங்களை அனுபவிக்க ஏற்ற காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்கள் எவை? சந்த்ரமண்டலம் புகுவதற்காக இயற்றப்பட்ட யாகம் போன்ற புண்ணிய கர்மங்களே, எதன் பயனாக ஸ்வர்க்கம் கிட்டுகிறதோ அப்படிப்பட்ட கர்மங்களே, நெல் போன்ற சரீரம் எடுத்து இன்ப–துன்பங்கள் அனுபவிக்கக் காரணங்களாக அமைகின்றன. எப்படி? இப்படிப்பட்ட கர்மங்கள் அக்னீஷோமம் போன்ற பசு, ஆடு வதையுடன் கூடிய கர்மங்களுடன் சேர்ந்துள்ளதால், அவை அசுத்தமானவையே ஆகும். எந்த உயிரையும் வதைக்கக்கூடாது என்பதை சாஸ்த்ரம் (மஹாபாரதம், சாந்திபர்வம், 278–5) – ந ஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி – எந்த உயிரையும் துன்பம் செய்யக்கூடாது – என்று கூறியது அல்லவோ? ஆகவே யாகத்தில் செய்யப்படும் ப்ராணிவதைகள் பாவம் என்றே ஆகின்றன (இப்படிப்பட்ட யாகத்தின் பலனாக ஸ்வர்க்கம் கிட்டினாலும், ப்ராணிவதை காரணமாகப் பாவமும் சேர்கின்றது என்று கருத்து. அந்தப் பாவங்கள் நெல் போன்ற பிறவியை அளிக்கலாம் என்பது பூர்வபக்ஷ வாதமாகும்).

இங்கு ஆஹவனீய ஹோமத்தினைக் கருத்தில் கொண்டு, அதில் உள்ளபடி உத்ஸர்க்கம் + அபவாதம் முறை கொண்டு, இங்கும் வாதம் செய்வது சரியல்ல (இது என்ன? விளக்குவோம் – உத்ஸர்க்கம் என்றால் பொதுவான விதியாகும். உதாரணமாக, எந்தப் ப்ராணியையும் வதைக்கக் கூடாது என்பது போன்ற விதியாகும். அபவாதம் என்றால் பொதுவான விதியில் இருந்து விலக்கு அளிக்கும் விதியாகும். உதாரணமாக – அக்னீஷோமீய யாகத்தில் பசுவதை ஏற்கப்பட்டது என்பது போன்றதாகும். இங்கு பூர்வபக்ஷி கூறுவது – இது போன்று விலக்கு விதிகள் உள்ளதால் பசுவதை முதலானவற்றால் பாவம் ஸம்பவிக்காது என்று வாதம் செய்வதை ஏற்க இயலாது – என்பதாகும்). என்ன காரணம்? கூறுவோம். அக்னீஹோமம் போன்றவற்றில் உள்ள பசுவதை முதலானவை, யாகத்தின் பொருட்டு விதித்துள்ளதால் அவை பாவம் ஆகாது. ஆனால் பலனை எதிர்பார்த்துச் செய்யும் எந்த ஒரு யாகமும், பசுவதை முதலான செயல்களுடன் கூடியுள்ளபோது பாவமே ஆகும்.

சந்தேகம் – அக்னீஷோமீய யாகத்தில் பசுவதை என்பது சாஸ்த்ரம் மூலம் விதிக்கப்பட்டதாகும். அப்படி என்றால் இங்கு பாவம் ஸம்பவிக்காது. ஆயினும், ஏதேனும் விருப்பத்தின் அடிப்படையில் இயற்றப்படும் யாகங்களில் உள்ள பசுவதை போன்றவை பாவம் ஏற்படுத்தும் அல்லவா?

பூர்வபக்ஷி – (தொடர்ந்து) தைத்திரீய ஸம்ஹிதை (2–5–5) – ஸ்வர்க்க காமோ யஜேத – ஸ்வர்க்கத்தில் ஆசை உள்ளவன் யாகம் செய்யவேண்டும் – என்று கூறியது. இதன் மூலம் ஸ்வர்க்கம் போன்ற பலன்களில் உள்ள விருப்பத்தால், அந்த யாகங்கள் அவனால் இயற்றப்படுகின்றன. அக்னீஷோமத்தில் உள்ள பசுவதை முதலானவற்றை, சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது போன்று செய்தால், உயர்ந்த பலன்கள் கிட்டும் என்ற ஆசை காரணமாகவே அவற்றை இயற்றுகிறான். மற்ற சில

நேரங்களில் பசுவதை போன்றவை வேறு சில ஆசை காரணமாகச் செய்யபடுகின்றன. இங்கு ஆசை என்பது பொதுவானதே ஆகும். இது தவிர அன்றாடம் செய்யப்படும் பல கர்மங்களும் இப்படி ஏதோ ஓர் ஆசையின் அடிப்படையில் அமைந்துள்ளது. உதாரணமாக, ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம் (2–1–2–2) – ஸர்வ வர்ணானாம் ஸ்வதர்ம அநுஷ்டானே பரம் அபரிமிதம் ஸுகம் – அனைத்து வர்ணத்தவர்களும் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை இயற்றுவது உயர்ந்த பலன் அளிக்கும் – என்று கூறியது. இதன் மூலம், நித்ய கர்மங்களான ஸந்த்யாவந்தனம் போன்றவையும் பலன் அடிப்படையிலேயே உள்ளன எனலாம்.

ஆக, ஆசை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் இயற்றப்படும் எந்த ஒரு செயலும் (யாகம் போன்ற புண்ணிய கர்மம் உள்பட) பாவத்துடன் சேர்ந்தே உள்ளது. எனவே புண்ணிய செயல்களின் விளைவாக ஒருவன் சந்த்ர மண்டலம் சென்றபோதிலும், அந்தச் செயல்களில் உள்ள பசுவதை போன்ற பாவச் செயல்கள் காரணமாக, அவன் கீழே இறங்கும் போது தானியங்களாகப் பிறக்கிறான் என்று கூறுவதில் தவறில்லை. இதனை மனுஸ்ம்ருதி (1–2–9) – சரீரஜை: கர்ம தோஷை: யாதி ஸ்தாவரதாம் நர: – சரீரம் காரணமாக உண்டாகும் பாவத்தின் மூலம் ஒருவன் தாவரமாக உடல் எடுக்கிறான் – என்று கூறியது. எனவே எஞ்சிய பாவ பலன் காரணமாக ஒருவன் நெல் போன்றவையாக உடல் எடுக்கிறான்.

ஸித்தாந்தம் – இதனை ஏற்க இயலாது. ஏன்? நீங்கள் கூறிய ஸ்ருதி வரிகளில் உள்ள சொற்கள் காரணமாகவே ஆகும். அக்னீஷோமீய யாகம் போன்றவைகளில் – வதைக்கப்படுவது இல்லை – என்ற கூறும் பதங்கள் உள்ளன. அந்த வரிகளில் உள்ள வதை என்ற பதமானது ஸ்வர்க்கலோகம் இட்டுச் செல்லும் பொருளில் படிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட வதம் காரணமாக அந்தப் பசு ஸ்வர்க்கம் புகுவதாகவே கூறப்பட்டது. இதனை – ஹிரண்யசரீர ஊர்த்வ: ஸ்வர்க்கம் லோகமேதி – பொன்மயமான உடல் எடுத்தபடி மேல் நோக்கி ஸ்வர்க்கம் செல்கிறது – என்று கூறியது காண்க. அதிசயத்தக்க தன்மை அளிக்கத்தகுந்த செயல் சிறிது துன்பத்தை ஏற்படுத்தினால், அதனை துன்புறுத்துவது (ஹிம்ஸை) என்று கூற இயலாது. இதனை தைத்திரீய ப்ராம்மணம் (3–7–7–14) – ந வா ஏதந் ம்ரியதே ந ரிஷ்யஸி தேவாந் இதேஷி பதிபி: ஸுகேபி: யத்ர யந்தி ஸுக்ருத: நாபி துஷ்க்ருத: தத்ர த்வா தேவ ஸவிதா ததாது – (பசுவதை செய்யப்படும் பசுவிடம்) இந்த யாகத்தின் பொருட்டு வதைக்கப்படும் நீ, மரணம் அடைவது கிடையாது, இது உனக்கு துன்பமும் ஏற்படுத்தாது, இதன் மூலம் நீ சிறந்த மார்க்கமாக தேவலோகம் அடையப் போகிறாய், புண்ணியம் செய்தவர்களால் மட்டுமே அடையப்படுவதும், பாவம் செய்தவர்களால் அடையப்படாததும் ஆகிய அந்த தேவலோகத்திற்கு உன்னை ஸவிதா என்ற சூரியன் அழைத்துச் செல்வானாக – என்று கூறியது. துன்பம் அளிக்கும் செயலைச் செய்யும் வைத்தியரிடம் நாம் செல்கிறோம் அல்லவா? அந்த வைத்தியன் நம்மைக் காப்பாற்றுபவன் என்று கூறுகிறோம்.

### 3–1–26 ரேதஸ்ஸிக்யோக: அத

பொருள் – விந்துவை விடுபவனாகக் கூறுவது போன்று.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தில் உள்ள ஸித்தாந்தம் தொடர்க்கிறது) சாந்தோக்ய உபநிஷத் (5–10–6) – அத யோ யோ ஹி அந்நமத்தி யோ ரேத: ஸிஞ்சதி தத் பூய ஏவ பவதி – யார் ஒருவன் அன்னத்தை உண்கிறானோ, யார் ஒருவன் விந்துவை விடுகிறானோ அவனாகவே ஆகிறான் (திரும்பிவரும் ஜீவன் இப்படிப்பட்டவனுடன் தொடர்பு கொண்டு விடுகிறான்) – என்று கூறியது. இது போன்றே நெல் முதலானவற்றுடன் சேர்த்தி அடைகிறான் என்று கொள்ளவேண்டும்.

3–1–27 யோநே: சரீரம்

பொருள் – கர்ப்பத்தை அடைந்த பின்னரே உடல் தோன்றுகிறது.

பாஷ்யம் – திரும்பி வரும் ஜீவன் பெண்ணின் கர்ப்பத்தில் சென்ற பின்னரே உடல் அடைகிறான். அதன் பின்னரே அவன் சுகதுக்கங்களை அனுபவிக்கத் தொடங்குகிறான். அதற்கு முன்னர் ஆகாயம் போன்ற பலவற்றுடன் சேர்த்தி மட்டுமே கொள்கிறான் (அவையாகவே மாறுவதில்லை). இதுவே இங்கு கூறப்பட்டது.

## மூன்றாம் அத்யாயம் முதல் பாதம் முற்றிற்று

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 5)

## 4. அர்த்தபஞ்சக அதிகாரம்
(முமுக்ஷுக்கள் அறியவேண்டிய ஐந்து தத்துவங்கள்)

ஆதௌ ப்ராப்யம் பரமம் அனதம் ப்ராப்த்ரு ரூபம் ச மாதௌ
இஷ்ட உபாயம் து அயனனமஸோரீர்ப்ஸிதார்த்தம் சதுர்த்யாம்
தத் வ்யாதாதம் மமக்ருதிகிரி வ்யஜ்ஜயந்தம் மனும் தம்
தத்ப்ராயம் ச த்வயம் அபி விதந் ஸம்மத: ஸர்வவேதீ

பொருள் – ப்ரணவத்திலும் (ஓம்), அஷ்டாக்ஷரத்திலும் (நாராயண) உள்ள – அ – என்பதன் மூலம், தோஷம் இல்லாததும் மிகவும் உயர்ந்ததும் அடையப்படவேண்டிய பொருளாக உள்ளதும் ஆகிய வஸ்து (பகவான்) கூறப்பட்டது. அடுத்து உள்ள – ம – என்பதன் மூலம், இப்படிப்பட்ட வஸ்துவை அடையவேண்டிய ஜீவனின் ஸ்வரூபம் கூறப்பட்டது. அயநம் (நாராயணாய என்பதில் உள்ள) என்பதன் மூலம், இப்படிப்பட்ட வஸ்துவை அடையும் உபாயமான ஸித்த உபாயம் கூறப்பட்டது. நம என்பதன் மூலம் இப்படிப்பட்ட உபாயத்திற்குத் தேவையான அங்கமான சரணாகதி (ஸாத்ய உபாயம்) கூறப்பட்டது. நாராயணாய என்பதில் உள்ள நான்காம் வேற்றுமை (நான்காம் வேற்றுமை என்பது யார் ஒருவருக்காக ஒன்றைக் கூறுகிறோமோ – உதாரணமாக உழவன் மாடுகளுக்கு நீர் அளிக்கிறான்) மூலம் அடையவேண்டும் என்று ஆசைப்படும் பொருள் கூறப்பட்டது. நம என்பதில் உள்ள – ம – என்ற பதம், இப்படிப்பட்ட பகவானை அடையத் தடையாக உள்ள மமகாரத்தைக் (என்னுடையது, நான் போன்றவை) குறிக்கும். இப்படியாக ஐந்து கருத்துக்களை விளக்கும் அஷ்டாக்ஷரத்தையும், அது போன்று உள்ள த்வயம் (மற்றும் சரம ச்லோகம்) ஆகியவற்றையும் அறிபவன், அனைத்தையும் அறிந்தவனாகிறான்.

ஐந்து அர்த்தங்களைக் கூறுவதற்கும் ஆறு அர்த்தங்களைக் கூறுவதற்கும் வேறுபாடு இல்லை. நாராயணாதி சப்தங்களிலே விவக்ஷிதமான ஸம்பந்த விசேஷத்தை ஸித்தாந்தத்துக்கு தளமாக்கி இத்தை அனுபந்தித்திருக்கும் அர்த்தபஞ்சகத்தைச் சிலர் விசாரித்தார்கள். இச்ஸம்பந்தத்தோடே கூட ஷடர்த்தங்களென்று சிலர் அனுஸந்தித்தார்கள்.

பொருள் – நாராயண மற்றும் ஓம் ஆகிய பதங்களின் மூலம், ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் இடையே உள்ள உறவுமுறை என்பது, ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் உள்ளது போன்றது என்பது விளக்கப்பட்டது. இந்தத் தத்துவத்தையே நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அடிப்படை என்று கருதுபவர்கள், முமுக்ஷுவால் அறியப்படவேண்டியது அர்த்தபஞ்சகமே என்று கருதி, அதனை ஆராய்ந்தனர். வேறு சிலர், அர்த்தபஞ்சகத்துடன், இந்த உறவுமுறையும் (ஈச்வரன்–ஜீவன்) அறியப்பட வேண்டும் என்று கருதி, ஆறு அர்த்தங்களை ஆராய்ந்தனர்.

## அர்த்தபஞ்சகத்தின் விளக்கம்

இச்ஸம்பந்தம்போலே முமுக்ஷுவுக்கு விசேஷித்து அறிய வேண்டுவதாகச் சேர்த்த அர்த்தபஞ்சகம் ஏதென்னில்

ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:
ப்ராப்த்யுபாய பலம் ச ஏவ ததா ப்ராப்தி விரோதி ச
வதந்தி ஸகலா வேதா: ஸ இதிஹாஸ புராணகா:

என்று சொல்லப்பட்டன.

விளக்கம் – ஈச்வரன்–ஜீவன் என்னும் தொடர்புடன் சேர்த்து, முமுக்ஷுக்கள் அறியவேண்டிய ஐந்து முக்கியமான கருத்துக்கள் என்னவென்பதை ஹாரீத ஸம்ஹிதை – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாய பலம் ச ஏவ ததா ப்ராப்தி விரோதி ச வதந்தி ஸகலா வேதா: ஸ் இதிஹாஸ புராணகா: – அடையப்பட வேண்டிய ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், அந்தப் ப்ரஹ்மத்தை அடையும் ஜீவனின் ஸ்வரூபம், இவ்விதம் ப்ரஹ்மத்தைச் சென்றடையும் உபாயம், ப்ரஹ்மத்தை அடைவதன் மூலம் பெறும் பயன் மற்றும் ப்ரஹ்மத்தை அடைவதற்குத் தடையாக உள்ள விஷயங்கள் என்பவையே ஆகும், இப்படியாகவே இதிஹாஸங்கள், புராணங்கள் ஆகியவற்றுடன் கூடிய வேதங்கள் கூறுகின்றன – என்று கூறியது.

## அடையப்பட வேண்டிய ஈச்வரனின் ஸ்வரூபம்

இவற்றில் ப்ராப்யமான ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபம் – திருமந்த்ரத்தில் ப்ரதம அக்ஷரத்திலும் நாராயண சப்தத்திலும், த்வயத்தில் ஸவிசேஷணங்களான நாராயண சப்தங்களிலும், சரமச்லோகத்தில் மாம், அஹம் என்கிற பதங்களிலும் அனுஸந்தேயம்.

விளக்கம் – இவற்றில் (அர்த்தபஞ்சகத்தில்) அடையப்பட வேண்டிய இலக்கான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்பது திருமந்த்ரத்தின் முதல் சொல்லான ஓம் என்பதில் உள்ள – அ – என்பதன் மூலமும், நாராயண என்ற பதம் மூலமும் அறியப்படுகிறது, த்வய மந்த்ரத்தில் உள்ள ஸ்ரீமந் என்ற அடைச்சொல்லுடன் கூடிய நாராயண என்ற பதம் மூலம் அறியப்படுகிறது, சரமச்லோகத்தில் உள்ள – நான், என் – என்ற பதங்கள் மூலம் அறியப்படுகிறது.

## ஈச்வரன் பெரியபிராட்டியை விட்டுப் பிரியாதவன் என்பதற்கான ப்ரமாணங்கள்

அவ்விடங்களில் அனுஸந்திக்கும்போது,

ஸ்ரீரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஏஷ நாராயண: ஸ்ரீமாந், பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ரதரோ விபு:, ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:, விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ, ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசனமப்ரவீத், ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம், அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீகணம், பவேயம் சரணம் ஹி வ:, பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா, தயா ஸஹாஸீனமனந்த போகினி, காந்தஸ்தே புருஷோத்தம:, ஸ்வபரிசரண போகை: ஸ்ரீமதி ப்ரீயமாணே, ஸ்ரீமதே நிர்மலானந்தோ தன்வதே விஷ்ணவே நம:, ஸ்ரீய:காந்த: அனந்தோ வரகுணகணைகாஸ்பத வபு:, ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸோ, ஸ்ரீய:பதிர் நிகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநாநந்த ஞானானந்த ஸ்வரூப:, நீயும் திருமகளும் நின்றாயால், ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப, கோலத் திருமாமகளோடு உன்னை, நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும், உன் தாமரை மங்கையும் நீயும், அகலகில்லேன் இறையும், உணர் முழு நலம், நந்தா விளக்கே அளத்தற்கரியாய் என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வாவஸ்தையிலும் ஸஹதர்மசாரிணியான பெரியபிராட்டியாரோடு பிரிவில்லாத முழு நலமான அனந்த ஞானானந்த ஸ்வரூபமாக அனுஸந்திக்க வேணும்.

விளக்கம் – பகவானின் ஸ்வரூபத்தை எல்லையற்ற ஞானம் உள்ளதாகவும், எல்லையற்ற ஆனந்தம் உள்ளதாகவும் அறிய வேண்டும். மேலும் அவன் எப்போதும், எந்த உருவிலும், எந்தச் சூழலிலும் தனது நாயகியான பெரியபிராட்டியாரை விட்டுப் பிரியாமல் உள்ளான் என்பதை அறியவேண்டும். அவள், அவனது அனைத்துச் செயல்களிலும் பங்கு கொள்கிறாள் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். அவன் பிராட்டியை இவ்விதம் பிரியாமல் உள்ளான் என்பதை பல ப்ராமாணங்கள் மூலம் அறியலாம்.

- லைங்க புராணம் – ஸ்ரீரியா ஸார்த்தம் ஜகத்பதி: – இந்த உலகின் பதியான நாராயணன் மஹாலக்ஷ்மியுடன் வைகுண்டத்தில் உள்ளான்.
- ஹரிவம்ஸம் (113–62) – ஏஷ நாராயண: ஸ்ரீமாந் – இந்த நாராயணன் எப்போதும் மஹாலக்ஷ்மியுடன் உள்ளான்.
- வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம் (120–13) – பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ரதரோ விபு: – இராமா. நீயே மஹாலக்ஷ்மியின் நாயகனும், சக்கரத்தை உடையவனும், உலகங்களின் எஜமானனும் ஆகிய நாராயணன் ஆவாய்.
- வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம் (114–15) – ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ: – ஸ்ரீவத்ஸம் என்ற மறுவைத் திருமார்பில் கொண்டவனாகவும், மஹாலக்ஷ்மியுடன் இணைந்தவனாகவும் உள்ளாய்.
- விஷ்ணு புராணம் (1–18–17) – விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ – மஹாலக்ஷ்மி விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள்.
- வால்மீகி இராமாயணம் ஆரண்ய காண்டம் (15–6) – ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசனமப்ரவீத் – லக்ஷ்மணன், இராமனிடம் சீதையின் முன்பாக இவ்விதம் கூறினான்.
- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (31–2) – ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம் – தன்னைச் சரணம் புகுந்தவர்களைக் காப்பேன் என்ற ஸங்கல்பம் உடைய இராமனிடமும் சீதையிடமும் லக்ஷ்மணன் கூறினான்.
- வால்மீகி இராமாயணம் ஸௌந்தர காண்டம் (58–87) – அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீகணம் – இராமனிடமிருந்து இந்த அரக்கிகளைக் காப்பாற்றும் திறன் சீதையிடம் உள்ளது.
- வால்மீகி இராமாயணம் ஸௌந்தர காண்டம் (58–90) – பவேயம் சரணம் ஹி வ: – சீதை அரக்கிகளிடம் நான் உங்களுக்குச் சரணம் புகும் இடம் ஆவேன் என்றாள்.
- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (31–27) – பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – இராமா, நீ சீதையுடன் இந்த மலை அடிவாரங்களில் சுகமாக இருப்பாயாக என்று லக்ஷ்மணன் கூறினான்.
- ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்னம் (39) – தயா ஸஹாஸீனமனந்த போகினி – மஹாலக்ஷ்மியுடன் இணைந்து ஆதிசேஷன் மீது உள்ள எம்பெருமானை.
- ஆளவந்தாரின் சதுச்ச்லோகீ (1) – காந்தஸ்தே புருஷோத்தம: – உனது ப்ரியமான நாயகன் புருஷோத்தமன்.

- ஆளவந்தாரின் ஆத்மஸித்தி (மங்கள ச்லோகம்) – ஸ்வபரிசரண போகை: ஸ்ரீமதி ப்ரியமாணே – மஹாலக்ஷ்மியுடன் அமர்ந்துள்ள எம்பெருமான், தனக்குச் செய்யப்படும் கைங்கர்யங்களை அனுபவித்து மகிழ்கிறான்.

- ராமானுஜரின் வேதாந்தசாரம் (மங்கள ச்லோகம்) – ஸ்ரீமதே நிர்மலானந்தோதன்வதே விஷ்ணவே நம: – மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்துள்ளவனும், தோஷங்கள் அற்றவனும் ஆகிய விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

- ராமானுஜரின் வேதாந்த தீபம் (மங்கள ச்லோகம்) – ஸ்ரிய:காந்த: அனந்தோ வரகுணகணைகாஸ்பத வபு: – மஹாலக்ஷ்மிக்குப் ப்ரியமானவனும், எல்லையற்ற கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ளவனும், எங்கும் நிறைந்தவனும்.

- ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம் (மங்கள ச்லோகம்) – ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸோ – மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமான பரப்ரஹ்மம்.

- ராமானுஜரின் கீதா பாஷ்யம் (அறிமுகம்) – ஸ்ரிய:பதிர் நிகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநாநந்த ஞானானந்த ஸ்வரூப: – மஹாலக்ஷ்மியின் பதியும், தாழ்வுகளுக்கு எதிர்தட்டாக உள்ளவனும், கல்யாண குணங்கள் நிறைந்தவனும், எல்லையற்ற ஞானம் மற்றும் ஆனந்தம் கொண்டவனும்.

- முதல் திருவந்தாதி (86) – நீயும் திருமகளும் நின்றாயால் – குன்றெடுத்து இந்த்ரனின் மழையிலிருந்து காத்தவனே. நீயும் மஹாலக்ஷ்மியும்.

- திருவாய்மொழி (4–9–10) – ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப – அழகான வளையல்கள் அணிந்த பிராட்டியுடன் நீயும் நிற்க.

- திருவாய்மொழி (6–9–3) – கோலத் திருமாமகளோடு உன்னை – மஹாலக்ஷ்மியுடன் பொருந்தியுள்ள உன்னை.

- திருவாய்மொழி (9–2–1) – நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் – உனது கருணையும், தாமரை மலரில் உள்ள பிராட்டியின் கருணையும்.

- திருவாய்மொழி (9–2–3) – உன் தாமரை மங்கையும் நீயும் – தாமரை மலரில் அமர்ந்துள்ள உனது நாயகியான பிராட்டியும் நீயும்.

- திருவாய்மொழி (6–10–10) – அகலகில்லேன் இறையும் – உன்னை விட்டு ஒரு நொடியும் பிரியாமல் இருப்பேன் என்ற பிராட்டி.

- திருவாய்மொழி (1–1–2) – உணர் முழு நலம் – ஞானமாகவும் ஆனந்தமயமாகவும் உள்ளவன்.

- பெரிய திருமொழி (3–8–1) – நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் – அணையாத விளக்கும், எல்லையற்றவனும் ஆகியவன்.

## ஈச்வரன் தாழ்ந்த குணங்கள் அற்றவன்

**இப்படி ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம், பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே என்கிறபடியே ஹேய ப்ரத்யநீகமாக அனுஸந்தேயம்.**

விளக்கம் – எம்பெருமான் தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்தட்டாக உள்ளான் என்பதைக் கீழே உள்ள வரிகளில் உணரலாம்:

- விஷ்ணு புராணம் (1–22–53) – ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் – விஷ்ணு என்ற திருநாமம் கொண்ட எம்பெருமானின் ஸ்வரூபம் தோஷங்கள் அற்றது.

- விஷ்ணு புராணம் (6–5–85) – பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே – அவன் உயர்ந்தவற்றை விட உயர்ந்தவன், அவனிடம் க்லேசம் முதலான தோஷங்கள் ஏதும் இல்லை.

## ஈச்வரன் எல்லையற்ற கல்யாண குணங்கள் கொண்டவன்

தைர்யுக்த: ச்ரூயதாம் நர:, தமேவம் குண ஸம்பன்னம், ஜ்யேஷ்டம் ச்ரேஷ்டகுணைர்யுக்தம், ஏவம் ச்ரேஷ்டகுணைர்யுக்த:, குணைர்விருருசே ராம:, தமேவம் குணஸம்பன்னம் அப்ரதத்ருஷ்யபராக்ரமம், பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே, ஆந்ருசம்ஸ்யமனுக்ரோச: ச்ருதம் சீலம் தமச்சம: ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம், விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:, சரண்யம் சரண்யம் ச த்வாம் ஆஹுர்திவ்யா மஹர்ஷய:, நிவாஸவ்ருக்ஷ: ஸாதூனாம் ஆபன்னானாம் பரா கதி: தேஜோ பலைச்வர்ய மஹாவபோத ஸ்வீர்ய சக்த்யாதி குணைகராசி:, ஸர்வபூதாத்ம பூதஸ்ய விஷ்ணோ: கோ வேதிதும் குணாந், யதா ரத்னாநி ஜலதே: அஸங்க்யேயாநி புத்ரக ததா குணாச்ச தேவஸ்ய த்வஸங்க்யேயா ஹி சக்ரிணா:, வர்ணாயுதைர்யஸ்ய குணா ந சக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வதேவை:, சதுர்முகயுர்யதி கோடிவக்த்ரோ பவேந்நர: க்வாபி விசுத்தசேதா: ஸ தே குணாநாமயுதைகமம்சம் வதேந்ந வா தேவவர ப்ரஸீத, தவானந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: யைஸ்த்வயேவ ஜகத்குக்ஷௌ அந்யே அப்யந்தர்நிவேசிதா:, இஷ்டக்ஷயாந்நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதி க்ஷயாத் மதி க்ஷயாந் நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத், வல்வினையேனை ஈர்க்கின்ற குணங்களை உடையாய், உயர்வற உயர்நலம் உடையவன் என்கிறபடியே ப்ராப்யத்வ ப்ராபகத்வோபயுக்தங்களான குணங்களாலே விசிஷ்டமாக அனுஸந்தேயம்.

விளக்கம் – அடையக்கூடிய பொருளாக இருப்பதற்கு ஏற்ற அனைத்துக் குணங்களையும், அவ்விதம் அடைவதற்கு ஏற்ற உபாயமாக இருப்பதற்கான குணங்களையும் அவன் கொண்டுள்ளான். இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்

- வால்மீகி இராமாயணம் பால காண்டம் (1–7) – தைர்யுக்த: ச்ரூயதாம் நர: – அந்தக் குணங்கள் அனைத்தும் கொண்ட மனிதனைப் பற்றிக் கூறுகிறேன்.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (2–48) – தமேவம் குண ஸம்பன்னம் – இவ்விதமாகக் குணங்கள் கொண்ட இராமனை.

- வால்மீகி இராமாயணம் பால காண்டம் (1–20) – ஜ்யேஷ்டம் ச்ரேஷ்டகுணைர்யுக்தம் – மூத்தவனும், மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டவனும் ஆகிய இராமன்.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (11–31) – ஏவம் ச்ரேஷ்டகுணைர்யுக்த: – இவ்விதமாக மிகவும் உன்னதமான குணங்கள் கொண்ட இராமனை.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (2–47) – குணைர்விருருசே ராம: – குணங்கள் மூலமாக இராமன் விளங்கினான்.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (1–34) – தமேவம் குணஸம்பன்னம் அப்ரதத்ருஷ்யபராக்ரமம் – இவ்விதமாக குணங்களின்

இருப்பிடமாக உள்ளவனும், யாராலும் வெல்லப்பட இயலாமல் உள்ளவனும் ஆகிய இராமன்.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (2–26) – பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே – தசரத மன்னா, உனது புத்ரனுக்குப் பல உயர்ந்த குணங்கள் உள்ளன.

- வால்மீகி இராமாயணம் அயோத்யா காண்டம் (33–12) – ஆந்ருசம்ஸ்யமனுக்ரோச: ச்ருதம் சீலம் தமச்சம: ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம் – தன்னிடம் சரணம் புகுந்தவர்களைக் காக்கும் தன்மை, கருணை, அனைத்து சாஸ்த்ரங்களும் அறிந்துள்ள தன்மை, தாழ்ந்தவர்களுடனும் சரிசமமாகப் பழகும் குணம், மன அடக்கம், புலன் அடக்கம் முதலான ஆறும் புருஷர்களில் உத்தமனான இராமனை அலங்கரிக்கின்றன.

- வால்மீகி இராமாயணம் ஸுந்தர காண்டம் (21–20) – விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: – தர்மம் அனைத்தும் அறிந்த இராமன், தன்னிடம் சரணம் புகுந்தவர்களிடம் மிகுந்த அன்புள்ளவன் என்று அனைவரும் அறிவார்கள் அல்லவோ?

- வால்மீகி இராமாயணம் யுத்த காண்டம் (121–18) – சரண்யம் சரண்யம் ச த்வாம் ஆஹுர்திவ்யா மஹர்ஷய: – இராமா. உன்னையே சரணம் புகுவதற்கு ஏற்றவன் என்றும், சரணம் அடைந்தவர்களைக் காப்பவன் என்றும் மஹரிஷிகள் கூறுகின்றனர்.

- வால்மீகி இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (15–19) – நிவாஸவ்ருக்ஷ: ஸாதூனாம் ஆபன்னானாம் பரா கதி: – ஸாதுக்களுக்கு இனிய நிழல் தரும் கற்பக மரம், துன்பத்தில் உள்ளவர்கள் அடையவேண்டிய சிறந்த கதி.

- விஷ்ணு புராணம் (6–5–85) – தேஜோ பலைச்வர்ய மஹாவபோத ஸ்வீர்ய சக்த்யாதி குணைகராசி: – தேஜஸ், பலம், ஐச்வர்யம், ஞானம், வீர்யம், சக்தி முதலான உயர்ந்த குணங்களின் இருப்பிடம்.

- ப்ரஹ்ம புராணம் – ஸர்வபூதாத்ம பூதஸ்ய விஷ்ணோ: கோ வேதிதும் குணாந் – அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ள விஷ்ணுவின் குணங்களை யார் முழுவதுமாக அறிவார்கள்?

- வாமன புராணம் (74–40) – யதா ரத்னாநி ஜலதே: அஸங்க்யேயாநி புத்த்ரக ததா குணாச்ச தேவஸ்ய த்வஸங்க்யேயா ஹி சக்ரிணா: – ஸமுத்ரத்தில் உள்ள இரத்தினக் கற்களைக் கணக்கிட இயலாது. அது போன்று, சக்கரத்தை ஏந்திய எம்பெருமானின் குணங்களைக் கணக்கிட இயலாது.

- மஹாபாரதம் கர்ண பர்வம் (83–15) – வர்ணாயுதைர்யஸ்ய குணா ந சக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வதேவை: – அனைத்துத் தேவர்களும் ஒன்றாக்கூடி நின்று, பல பதினாயிரம் வருடங்கள் கூறினாலும் அவனது குணங்களை முழுவதுமாகக் கூறி முடிக்க இயலாது.

- வராஹ புராணம் (73–35) – சதுர்முகயுர்யதி கோடிவக்த்ரோ பவேந்நர: க்வாபி விசுத்தசேதா: ஸ தே குணாநாமயுதைகமம்சம் வதேந்ந வா தேவவர ப்ரஸீத – ப்ரம்மனின் ஆயுள், பல ஆயிரக்கணக்கான வாய்கள், மிகவும் தூய்மையான மனம் ஆகியவற்றை உடைய ஒருவன் உள்ளான் என்று வைத்துக் கொள்வோம். அவனால் கூட உனது குணத்தின் பதினாயிரத்தின் ஒரு பகுதியைக் கூற இயலுமோ இயலாதோ?

- தவானந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: யைஸ்த்வயேவ ஜகத்குக்ஷௌ அந்யே அப்யந்தர்நிவேசிதா: – கணக்கற்ற குணங்களை நீ

கொண்டிருந்தாலும் ஆறு குணங்களே உனக்கு மிகவும் ப்ரதானமாக உள்ளன. இந்த உலகை நீ வயிற்றில் வைத்தது போன்று, அந்த ஆறு குணங்களும் மற்ற குணங்களைத் தங்களுக்குள் கொண்டுள்ளன.

- இஷூக்ஷயாந்நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதி க்ஷயாத் மதி க்ஷயாந்நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத் – ஆகாயம் முழுவது அம்பால் நிரப்பவேண்டும் என்று புறப்படும் சிலர், தங்களிடம் உள்ள பாணங்கள் தீர்ந்து விட்டதால் ஓய்கின்றனர் அல்லாமல், ஆகாயம் நிரப்பப்பட்டதால் இல்லை. அது போன்று, கோவிந்தனின் குணங்களைக் கூறத் தொடங்குபவர்கள் தங்கள் புத்தி ஓய்ந்ததால் நிறுத்துகின்றனர் அல்லாமல், அவனது குணங்களைக் கூறி முடித்து விட்டதால் அல்ல.

- திருவாய்மொழி (8–1–8) – வல்வினையேனை ஈர்க்கின்ற குணங்களை உடையாய் – மிகவும் கொடிய வினைப்பயன்கள் உடைய என் போன்றவனையும் உன்பால் ஈர்க்கும் குணங்கள் கொண்டவனே.

- திருவாய்மொழி (1–1–1) – உயர்வற உயர்நலம் உடையவன்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் (பகுதி – 5)

17. சொல்லும் க்ரமம ஒழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது.

அவதாரிகை – இன்னம் ஒரு ப்ரகாரத்தாலே இதன் வைபவத்தை அருளிச் செய்கிறார் – சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும் – என்று தொடங்கி.

விளக்கம் – இந்த மந்திரத்தின் மேன்மையை மேலும் ஒரு வழி மூலம் விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஏதேனும் ஒரு மந்த்ரமும் தன்னைத் தஞ்சமாக விச்வசித்துச் சொன்னவர்களுக்கொழியத் தன் கார்யம் செய்யாதேயாகிலும், இது அங்ஙனன்றிக்கே தன்னைத் தஞ்சமாக விச்வசித்துச் சொல்லுகையாகிற க்ரமம் ஒழிய, ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யஞ்ச ஸ்தோபம் ஹேளநமேவ வா என்கிறபடியே சொல்லிலும், சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன் ஸ்வரூபத்தில் நழுவ நில்லாதென்கை.

விளக்கம் – எந்த ஒரு மந்த்ரமும் அதனையே (அந்த மந்த்ரத்தையே) தஞ்சம் என்று முழுவதுமாக நம்பி உச்சரித்தால் மட்டுமே பயன் அளிக்கும். ஆனால் திருமந்த்ரம் அப்படிப்பட்டது அல்ல. இதில் முழு நம்பிக்கை வைத்து உச்சரிக்காமலும், இதனையே தஞ்சமென்று எண்ணியபடி கூறாமலும், ஸ்ரீமத்பாகவதம் (6–3–14) கூறுவதுபோல் – ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் ச் ஸ்தோபம் ஹேளநமேவ வா – மற்றவர்களின் பெயர் போன்று நாராயண நாமத்தை உச்சரித்தாலும் (அஜாமிளன் போன்று) பரிகாசம் செய்வதற்காக உச்சரித்தாலும் (சிசுபாலன் போன்று), பொருள் ஏதும் இன்று உச்சரித்தாலும் ஏளனம் செய்வதற்காக உச்சரித்தாலும் இது அனைத்து பாவத்தையும் நீக்கும் – எப்படிக் கூறினாலும், தன்னை உச்சரிப்பவர்களைக் காப்பாற்றும் தன்மைகளிலிருந்து இந்த மந்த்ரம் நழுவுவதில்லை.

18. இதுதான் குலத்தரும் என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

அவதாரிகை – இனி இதன் ஸர்வாபேக்ஷிதப்ரதத்வமாகிற வைபவத்தை அருளிச்செய்கிறார் இதுதான் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து, இது அனைத்து பயன்களையும் அளிக்கவல்லது என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இம்மந்த்ரந்தான் குலந்தரும் என்று தொடங்கி ஆழ்வார் அருளிச்செய்தபடியே, அதிகாரானுகுணமான அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்குமென்கை.

விளக்கம் – இந்தத் திருமந்த்ரமானது, திருமங்கையாழ்வார் (1–1–9) கூறுவது போல் – குலம் தரும் – என்னும்படி அவரவர்களின் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற அனைத்தையும் அளிக்கும்.

19. ஐஸ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.

அவதாரிகை – அத்தை விசதீகரிக்கிறார் ஐச்வர்ய இத்யாதியாலே.

விளக்கம் – கடந்த சூர்ணையில் கூறியதை மேலும் விவரிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி என்கிறபடியே ஐஹிகமாயும் பாரலௌகிகமாயுமிருக்கும் ஐச்வர்யத்தையும், ஆத்மப்ராப்தி ரூபமான கைவல்யத்தையும், பரம புருஷார்த்தமான பகவல் லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு ஜப ஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதனமாய் நின்று, அவ்வோ புருஷார்த்தங்களைக் கொடுக்குமென்கை.

விளக்கம் – ஸ்ம்ருதி – ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி – இந்த உலகத்தில் உள்ள செல்வம், ஸ்வர்க்கம் முதலான அந்த உலகத்துச் செல்வம், ஆத்ம அனுபவம் எனப்படும் கைவல்யம், பகவத் அனுபவம் ஆகியவற்றைன் இம்மந்த்ரம் அளிக்கும் – என்று கூறுவது போன்று, இந்த மந்த்ரமானது இந்த உலகில் உள்ள செல்வங்கள், அந்த உலகில் உள்ள செல்வங்கள், ஆத்மாவை அனுபவிக்கும் கைவல்யம், மிக உயர்ந்த புருஷார்த்தமான பகவத் அனுபவம், ஆகியவற்றை அளிக்கிறது. இவற்றை விரும்பும் அதிகாரிகளுக்கு ஜபம், ஹோமம் முதலான உபாயங்களாகத் திருமந்த்ரமானது தானாகவே நின்று, அந்தப் புருஷார்த்தங்களை அளித்து விடுகிறது.

20. கர்மஜ்ஞாநபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக் கட்டிக்கொடுக்கும்.

அவதாரிகை – இனி, கர்மாயுத்பாய ஸஹகாரித்வரூபமான இதன் வைபவத்தை அருளிச் செய்கிறார் கர்மஜ்ஞான இத்யாதியாலே.

விளக்கம் – கர்மயோகம் முதலானவற்றில் ஏற்படும் தடையை நீக்கி அவற்றை அளிக்கவல்லது என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், கர்மயோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி, அந்தக் கர்மத்தினுடைய அவிச்சேதாபாதகமாய்க் கொண்டு அத்தைக் தலைக்கட்டிக் கொடுக்கும். ப்ரதமத்திலே, ஞானயோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில் கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்ப விரோதி பாபநிவ்ருத்தியைப் பண்ணி அந்த ஜ்ஞானத்துக்கு நாடோறும் அதிசயத்தைப் பண்ணா நின்றுகொண்டு, அத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கும். பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், பக்தியோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி, பக்தி வ்ருத்தி ஹேதுவாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்குமென்கை.

விளக்கம் – கர்ம யோகத்தில் ஈடுபடும் அதிகாரிகள் ஜபம் முதலானவற்றின் மூலம் இந்த மந்த்ரத்தைத் துணையாகக் கொள்ளும் போது, அத்தகைய யோகம் தொடங்குவதற்குத் தடையாக உள்ள பாவங்களை, இந்தத் திருமந்த்ரம் நீக்கி விடுகிறது. மேலும் கர்மயோகத்தை மேம்படுத்தி, அதனைச் சுலபமாக முடிக்கவும் செய்கிறது. ஞானயோகத்தில் ஈடுபடுபவர்கள் திருமந்த்ரத்தைத் துணையாக கொண்டால், அவர்களுக்குக் கர்மயோகம் மூலம் ஏற்படும் ஞானயோகத்திற்கு உண்டாகக் கூடிய தடைகளான பாவங்களை நீக்குகிறது. மேலும், அவர்களுக்கு ஞானயோகம் வளரும்படிச் செய்து, அதனைப் பூர்த்தி செய்கிறது. பக்தியோகத்தில் ஈடுபடுபவர்கள் திருமந்த்ரத்தைத் துணையாக கொண்டால், அவர்களுக்குப் பக்தியோகம் தொடங்குவதற்கு உள்ள தடைகளான பாவங்களை நீக்குகிறது. மேலும், அவர்களுக்குப் பக்தியோகம் வளரும்படிச் செய்து, அதனைப் பூர்த்தி செய்கிறது.

21. ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

அவதாரிகை – இங்ஙனன்றிக்கே, ப்ரபந்நர்க்கு இது செய்யும் உபகார வைபவத்தை அருளிச்செய்கிறார் ப்ரபத்தியிலே என்று தொடங்கி.

விளக்கம் – பகவானை மட்டுமே ப்ராப்யமாகக் கொண்ட ப்ரபந்நர்களுக்கு இந்த மந்த்ரம் செய்யும் நன்மைகளைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, கீழ்ச்சொன்னவைபோலே துச்சகமுமாய், ஸ்வரூப விருத்தமுமாய் இருக்கையன்றிக்கே, ஸூசகமுமாய், ஸ்வரூபானுரூபமான ப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, தததநுரூபமான பகவத்பாரதந்த்ய ரூப ஸ்வரூப ஜ்ஞானத்தை விசகமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போது போக்குகைக்கும் ஹேதுவாய், எனக்கென்றுன் தேனும்பாலுமமுதுமாய திருமால் திருநாமம் என்கிறபடியே ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம் போக்யமாயிருக்கையாலே, போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

விளக்கம் – மேலே கூறப்பட்ட கர்ம–ஞான–பக்தி யோகம் போன்று பின்பற்றுவதற்குக் கடினமானதாக இல்லாமலும், ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற தக்கது அல்ல என்று கூறமுடியாமலும் திருமந்த்ரம் உள்ளது. ஜீவன் பகவானுக்கு அடிமையாக உள்ளவன் (பகவத் பாரதந்த்ரியம்) என்ற ஞானத்தை ஜீவனுக்குத் திருமந்த்ரம் உண்டாக்குகிறது. இந்த மந்த்ரமானது, தன்னைப் பற்றிய பொருளையே ஜீவன் எப்போதும் எண்ணியபடி, பொழுது போக்கும் விதமாக அமைந்துள்ளது. பெரிய திருமொழி (6–10–6) – எனக்கு என்றும் தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம் – என்பது போன்று, திருமந்த்ரத்தால் கூறப்படும் எம்பெருமானைப் போன்று, இந்த மந்த்ரமும் இனிமையாக உள்ளது. ஆக பகவானை போன்றே இதுவும் அனுபவித்து மகிழக் காரணமாக உள்ளது.

22. மற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே அறிய வேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு.

அவதாரிகை – இனி, ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார், மற்றெல்லாம் பேசிலும் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து ஜீவன் உய்வதற்காக அறியப்படவேண்டிய அர்த்தங்களைத் திருமந்த்ரம் கூறுகிறது என்று இதன் பெருமையைத் தெரிவிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, நின் திருவெட்டெழுத்துங் கற்று மற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்கு உடலாக அறிய வேண்டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் இம்மந்திரத்துக்குள்ளே உண்டென்கை.

விளக்கம் – பெரிய திருமொழி (8–10–3) – நின் திரு எட்டெழுத்தும் கற்று மற்றெல்லாம் பேசிலும் – மற்றவற்றைக் கூறுவதை விட உன்னை பற்றிய திருவஷ்டாக்ஷரத்தைக் கற்றேன் – என்று ஆழ்வார் கூறியபடி, ஜீவன் கரையேறுவதற்கு அறிந்து கொள்ளவேண்டிய அனைத்து அர்த்தங்களும் திருமந்த்ரத்தில் உண்டு.

23. அதாவது – அஞ்சர்த்தம்.

அவதாரிகை – அறியவேண்டும் அர்த்தமெல்லாம் ஆகிறது எது? என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் அதாவது அஞ்சர்த்தம் என்று.

விளக்கம் – அறிய வேண்டிய அர்த்தங்கள் என்று எதனைக் கூறினார் என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – ஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதி ஸ்வரூபங்களாகிற அர்த்த பஞ்சகமும் என்றபடி. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததாப்ராப்தி விரோதி ச் வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: முநயச்ச மஹாத்மாநோ

வேதவேதார்த்தவேதிந: என்கிறபடியே, ஸகல வேதசாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையுமாகையாலே, தத்ஸங்க்ரஹமான இம்மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யம் இதுவேயிறே. இம்மந்த்ரந்தான் ப்ராணவத்தாலே ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோத்யுபாய ஸ்வரூபங்களையும், நாராயண பதத்தாலே பரஸ்வரூபத்தையும், அதில் சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கக் கடவதாயிறே இருப்பது.

விளக்கம் – ஜீவனின் ஸ்வரூபம், ஜீவன் அடையக் கூடிய பரமாத்மாவின் ஸ்வரூபம், பரமாத்மாவை அடைந்து பெறக் கூடிய புருஷார்த்தத்தின் ஸ்வரூபம், அந்தப் புருஷார்த்தத்தை பெற உதவும் உபாயத்தின் ஸ்வருபம் மற்றும் அந்த புருஷார்த்தத்தை பெறுவதற்கு ஏற்படும் தடைகளின் ஸ்வருபம் – ஆகியவையே அர்த்த பஞ்சகம் எனப்படும். இதனையே ஹாரித ஸ்ம்ருதி – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததாப்ராப்தி விரோதி ச் வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந: – அடையப்படவேண்டிய ப்ரஹ்மத்தின் தன்மை, அவனை அடைவதற்கான வழி, அவனை அடைவதம் மூலம் பெறக் கூடிய பலன், அவனை அடைவதற்கு உண்டாகும் தடை ஆகியவற்றை இதிகாசம் மற்றும் புராணங்களுடன் சேர்ந்த வேதங்களும், இத்தகைய வேதம் அறிந்த முனிவர்களும் கூறுகின்றனர் – என்று கூறியது. இந்த வரிகளின்படி அனைத்து வேதங்களும் கொண்ட சாஸ்த்ரங்களும் அர்த்தபஞ்சகத்தையே நன்கு உரைக்கின்றன என்பது விளங்கும். எனவே இத்தகைய சாஸ்த்ரங்களையும், வேதங்களையும் தனது ஸாரமாகக் கொண்ட திருமந்த்ரமும், அவைகள் கூறும் அர்த்தபஞ்சகத்தையே கூறவேண்டும் அல்லவா? திருமந்த்ரமானது முதல் பதமான ப்ரணவத்தின் (ஓம்) மூலம் ஜீவனின் ஸ்வரூபத்தையும், நம என்ற பதம் மூலம் பகவானை அடையத் தடையாக உள்ளவற்றின் ஸ்வரூபம் மற்றும் அவனை அடைய உள்ள உபாயத்தின் ஸ்வரூபத்தையும், நாராயண என்ற பதத்தின் மூலம் பரம்பொருளின் ஸ்வரூபத்தையும், நாராயணாய என்பதில் உள்ள ஆய என்பதன் மூலம் அடையப்படும் புருஷார்த்தத்தின் ஸ்வரூபத்தையும் கூறுகிறது.

24. பூர்வாசார்யர்கள், இதில் அர்த்தம் அறிவதற்கு முன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள், இதில் அர்த்தஜ்ஞானம் பிறந்த பின்பு, பிறந்தபின் மறந்திலேன் என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள்.

அவதாரிகை – இம்மந்த்ரார்த்த வைபவத்தை அருளிச்செய்கிறார் மேல் பூர்வாசார்யர்கள் என்று தொடங்கி.

விளக்கம் – இந்த மந்த்ரத்தின் பொருளுடைய மேன்மையை அடுத்து அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, நாதயாமுனயதிவராதிகளான நம் பூர்வாசார்யர்கள், அன்று நான் பிறந்திலேன் என்கிறபடியே இம்மந்த்ரத்தில் அர்த்தமறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள், இதில் அர்த்தஜ்ஞானம் தங்களுக்குண்டான பின்பு, பிறந்தபின் மறந்திலேன் என்று ஆழ்வார் திவ்ய ஸூக்தியில் சொல்லுகிறபடியே இம்மந்த்ரார்த்தத்தையொழிய மற்றொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்களென்கை. வேதசாஸ்த்ரங்கள் ஆழ்வார் அருளிச் செயல்கள் இவற்றால் போதுபோக்கும்போதும் இம்மந்த்ரார்த்தத்தை உட்கொண்டே அனுஸந்திக்கையாலே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள் என்னத் தட்டில்லை.

விளக்கம் – திருசந்தவிருத்தத்தில் (64) – அன்று நான் பிறந்திலேன் – என்று ஆழ்வார் கூறுவது போன்று நம்முடைய பூர்வாசார்யர்களான நாதமுனிகள், யாமுனாசார்யர், யதிராசர் முதலானவர்கள், திருமந்த்ரத்தின் பொருளை அறிவதற்கு முன்பாகத் தாங்கள் பிறக்கவே இல்லை என்று நினைக்கின்றனர். திருசந்தவிருத்தத்தில் (64) – பிறந்த பின் மறந்திலேன் – என்று ஆழ்வார் கூறுவது போன்று, இந்த மந்த்ரத்தின் பொருளைத் தவிர வேறு எதன் மூலமும் தாங்கள் பொழுதைப் போக்க மாட்டனர். வேதங்கள், சாஸ்திரங்கள் மற்றும் ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் ஆகியவற்றின் மூலம் தங்கள் பொழுதைப் போக்கிய போதிலும், இந்தத் திருமந்த்ரத்தின் உட்கருத்தை அவற்றின் வழியே

மறைமுகமாக அனுபவிப்பதால், திருமந்த்ரத்தைத் தவிர, வேறு எதன் மூலமும் பொழுதைப் போக்க மாட்டனர் என்று கூறுவது சரியே ஆகும்.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 5)

(கையதுவும் சீரார் வலம்புரியேயென்றாள்) – ஒரு கையிலே ஸ்ரீபாஞ்சஜன்யத்தை உடையவனென்றாள். சந்த்ரோதயம்போலே இருளன்ன மாமேனிக்குப் பரபாகமான ஸ்ரீபாஞ்சஜன்யத்தைச் சொன்னாள். வலம்புரிக்குச் சீர்மையாவது (உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்) – உண்ணும்படிச் சொல்லில் அவன் வாயாலே ஊட்ட உண்பது. (கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே) – அவன் வடிவைக் கடைக்கணித்துக் கொண்டு திருக்கையிலேயாயிற்று இடம் வலம் கொள்வது. ப்ரஸாதத்தைச் சூடிக் கைப்புடையிலே கிடப்பாரைப்போலே. (பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்) – இவன் பெண்களுக்குத் துறையாயிருக்கும். ஸ்ரீமதுரையிலும் திருவாய்ப்பாடியிலுமுள்ள பெண்கள் கையெடுத்துக் கூப்பிடா நின்றார்கள். (பண்பல செய்கின்றாய்) – பகவத் விஷயத்திலே ப்ரத்யாஸந்நர் செய்வதும் செய்கிறிலை. அவர்கள் தனியே அநுபவியார்களிறே. (பாஞ்சசன்னியமே) – நீ வந்து சேர்ந்த இடத்துக்குத்தகாது உன் குணம். உன் பிறப்புக்குச் சேருமத்தனை. பாஞ்சஜன்யமிறே. (திருத்துழாய் தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) – உபவிபூதி நாதனாக இட்ட தனிமாலையைச் சொன்னாள். தாமத்துளப நீண்முடிமாயன் தனக்கிறே இவள் மடலெடுக்கிறது.

விளக்கம் – (கையதுவும் சீரார் வலம்புரியே என்றாள்) – ஒரு கையில் ஸ்ரீபாஞ்சஜன்யம் என்ற சங்கைக் கொண்டவன் என்றாள். இருளில் சந்த்ரன் உதிப்பது போன்று, இவனது கறுத்த திருமேனியில் வெண்மையான சங்கு உள்ளது. இருள் போன்ற நிறத்துக்கு நிறச்சேர்த்தி போன்ற சங்கைக் கூறினாள். வலம்புரிச் சங்கின் சீர்மை(= மேன்மை) என்ன? கீழே உள்ள பல வரிகள் காண்க:

- நாச்சியார் திருமொழி (7–8) – உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம் – இந்தச் சங்கு உண்ணும் விதத்தைக் கூறவேண்டும் என்றால், அவன் தனது திருவாயால் ஊட்ட, இது உண்ணுகிறது.

- நாச்சியார் திருமொழி (7–8) – கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே – உண்ட மயக்கம் தீர அவனது திருக்கரத்தில், அவனது அழகான திருமேனியைக் கடைக்கண்களால் கண்டபடி படுத்துக் கொள்கிறது. நாயகன் கையால் மாலைகள் சூட்ட, அவனது கைகளில் சாய்ந்துள்ள நாயகி போன்று சங்கின் நிலை உள்ளது.

- நாச்சியார் திருமொழி (7–8) – பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார் – இவனது திருவாயில் உள்ள அமிர்தம் பெண்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருப்பதாகும். ஆனால் இதனை இப்போது, இந்தச் சங்கு மட்டும் பருகுவதைக் கண்ட மதுரா நகரத்திலும், ஆய்ப்பாடியிலும் உள்ள பெண்கள் – இது முறையல்ல – என்று கையைக் காண்பித்து மறுக்கின்றனர்.

- நாச்சியார் திருமொழி (7–8) – பண்பல செய்கின்றாய் – சங்கே. உனக்குப் பண்பாக இல்லாத செயலைச் செய்கின்றாய். பகவத் விஷயத்தில் அடியார்கள் அவனைத் தனியே அனுபவிக்க மாட்டனர். ஆனால் நீயோ இப்படிச் செய்கிறாய்.

நீ இப்போது உள்ள இடத்திற்கு ஏற்காத செயலைச் செய்கிறாய். அதற்குக் காரணம் நீ பஞ்சசனன் என்ற அசுரனின் வயிற்றில் பிறந்ததால் உனது குணமும் பிறப்பும் இவ்விதம் உள்ளது போலும். (திருத்துழாய் தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) – தானே உபயவிபூதி நாதன் என்று உணர்த்துவதற்காக சிறந்த துளசி மாலையை அணிந்துள்ளான் என்றாள். பெரிய திருமொழி (6–5–10) – தாமத்துளப நீண்முடிமாயன் – என்று தன்னால் எப்போதும் கூறப்படுபவனுக்கு அல்லவோ இவள் மடல் எடுக்கிறாள்?

கீழ்ச்சொன்னவையடைய ஸ்வகதமாகச் சொன்னாள்.(கட்டுரையா) – அவற்றைத் தன்னிலே சொன்ன அநந்தரம். (நீர் ஏதுமஞ்சேன்மின்) – நீங்கள் ஏதேனும் சிலவென்று பயப்படாதே கொள்ளுங்கோள். தேவதாந்தரஸ்பர்சமில்லை. நீங்கள் அஞ்சாதே கொள்ளுங்கோள் என்கிறாள். (நும் மகளை நோய் செய்தான் ஆரானுமல்லன்) – இவள் நோவுபடுங்காட்டில் உங்களையும் மறக்க வேணுமோ? உங்கள் வயிற்றிலே பிறந்தாரை அவரதேவதைகளால் நோவப் பார்க்கவொண்ணுமோ? (ஆரானுமல்லன்) – நாய் தீண்டிற்றில்லை.

விளக்கம் – இதுவரை கட்டுவிச்சி, தான் அறிந்த உண்மைகளை தாய்க்கும் மற்றவர்களுக்கும் சைகை முறையிலே உரைத்து வந்தாள். இப்போது அவைகளைத் தனது வாயால் கூறுகிறாள். (கட்டுரையா) – இதுவரை தனக்குள் கூறியவற்றை உரைக்கத் தொடங்கினாள். (நீர் ஏதும் அஞ்சேன்மின்) – இவளை ஏதோ ஒன்று பிடித்துக் கொண்டது என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். இவளை எந்த க்ஷுத்ர தேவதையும் பிடிக்கவில்லை. ஆகவே நீங்கள் அஞ்சாதீர்கள். (நும் மகளை நோய் செய்தான் ஆரானுமல்லன்) – இவள் இப்படியாக மனநோயினால் பாதிக்கப்பட்டவுடன் உங்களை நீங்களே மறந்து விட்டீர்களா? உங்கள் வயிற்றிலே பிறந்த இவளை ஏதேனும் க்ஷுத்ர தேவதை தீண்டவும் இயலுமா?

(அறிந்தேன் அவனை நான்) – ஸ்வயத்நத்தாலே காணப்புக்கு யதோ வாசோ நிவர்த்தந்தே என்று மீண்ட வேதம் போலன்றியே, அவன் காட்டின வெளிச்செறிப்பாலே அவனைக் கண்ட நான் அறிந்தேன். (கூரார்வேல் கண்ணீர்) அறிந்தாளாகில் இவள் ஆரென்று தலைக்கட்டப் புகுகிறாளென்று சொல்லி எல்லாருமொக்கத் தன்னை கூர்க்கப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை ஸம்போதிக்கிறாள். (உமக்கறியக் கூறுகேனோ) – இவளுடைய நோய்க்கு தேவதாந்தரங்களின் காலிலே விழும்படி கலங்கியிருக்கும் நீங்களுங்கூட அறியும்படி வார்த்தை சொல்லவோ?

விளக்கம் – (அறிந்தேன் அவனை நான்) – தங்களது முயற்சியால் அவனைக் காண முயன்ற வேதங்கள் – யதோ வாசோ நிவர்த்தந்தே – சொல்லும் மனமும் திரும்புகின்றன – தோல்வி அடைந்து திரும்பியது போன்று நான் செய்யவில்லை. அவன் எனக்கு அளித்த ஞானம் கொண்டு அவனை நான் கண்டுகொண்டேன். (கூரார்வேல் கண்ணீர்) – அங்கிருந்த அனைவரும் இவள் யார் என்று கண்டுபிடித்துவிட்டாள், அதனை இப்போது கூறி விடுவாள் என்று புரிந்துகொண்டு, தங்கள் கண்களையும் காதுகளையும் கூராக்கிக் கொண்டு, கட்டுவிச்சியையே பார்த்தபடி நின்றனர். அவர்களிடம் கூறத் தொடங்கினாள். (உமக்கறியக் கூறுகேனோ) – இவளுடைய நோய் நீங்கவேண்டும் என்பதற்காக உங்கள் அறிவிழந்து க்ஷுத்ர தேவதைகளின் கால்களில் விழுந்தீர்கள். இப்படி அறிவற்ற நீங்களும் புரிந்துகொள்ளும்படிக் கூறுகிறேன்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்

(பகுதி – 5)

(விண்ணவர்கோன் விரையார்ப்பொழில் வேங்கடவன்) – ஆற்றிலே அழுந்துவார் ஆழங்காலிலே இளைப்பாறத் தேடுமாபோலே அவர்களும் வந்து அடிமை செய்யுமிடம். (வேங்கடவன்) – அர்ச்சாவதாரத்துக்குப் பொற்கால் பொலியவிட்டவிடம். (நிமலன்) – இத்தலையில் அர்த்தித்வமும் கூடவின்றிக்கேயிருக்க, இப்படி உபகரிக்கையால் வந்த ஔஜ்வல்யம். இவனும் ஓரடியிடப்பார்த்திராதொழிகை. அசித்வயாவ்ருத்தியாலே ஓரடியிட்டாருண்டாகில் பத்ப்யாமபிக மாச்சைவ ஸ்நேஹஸந்தர்சநேநச. (நின்மலன்) – இத்தலைக்கு உபகரித்தானா யிருக்கையன்றிகே தன் பேறாயிருக்கை. அமலன் என்று தனக்காக்கினபடி, விமலன் என்று தன்னடியார்க்காக்கினபடி, நிமலன் என்று நான் பச்சையிடாதிருக்க என்கார்யம் செய்தானென்கிறார். (நின்மலன்) – இது தன் பேறாகச் செய்தானென்கிறார். க்ருத்க்ருத்யஸ்ததாராம: என்கிறபடியே.

(நீதிவானவன்) – சேஷசேஷித்வங்கள் முறைமாறாத நித்யவிபூதியிலேயுள்ளவன். ஈச்வரோஹம் என்று எதிரிட்டிருக்குமிடமிறே இவ்விடம், அங்கு கலக்குவாருமில்லை, கலங்குவாருமில்லை, இங்கு கலக்குவாருமுண்டு, கலங்குவாருமுண்டு. (நீள்மதிளரங்கத்தம்மான்) – நீதிவானவன் என்னா, நீண் மதிளரங்கத்தம்மா னென்கிறார், அளப்பரியவாரமுதை அரங்கமேயவந்தணனை என்னுமாபோலே (நீண்மதிள்) – ரக்ஷகத்வத்துக்குப் போரும்படியான மதிளையுடைய பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பரமசேஷி. (அம்மான்) – ஈரரசு தவிர்த்தாலிறே சேஷித்வம் பூர்ணமாவது. திருமலையில் போக்யதை நிலமல்லாமையாலே மீளவும் கோயிலிலே புகுகிறார். வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தே விடுமாபோலே, திருவேங்கடமுடையான் வடக்குத் திருவாசலாலே வந்து புகுந்தானத்தனை என்றுமாம். (திருக்கமலபாதம்) – செவ்வியும் குளிர்த்தியும் விகாஸமும் பரிமளமும் தொடக்கமானவை.

விளக்கம் – (நீதிவானவன்) – எஜமானன்–அடிமை என்ற முறை மாறாமல் உள்ள பரமபதத்தில் உள்ளவன். இந்தப் பூமியில் மட்டுமே – ஈச்வரோஹம் – நானே ஈச்வரன் – என்று வாதம் செய்யும் தன்மை உள்ளது. பரமபதத்தில் இது போன்ற தவறான கருத்துக்கள் கொண்டு யாரும் மயக்குவதும் இல்லை, அவ்விதம் மயங்குபவர்களும் இல்லை. ஆனால் இந்தப் பூமியில் இது போன்ற தவறான வாதங்கள் கொண்டு நம்மை மயங்கச் செய்பவர்களும் உண்டு, இந்த வாதத்தினால் மயங்குபவர்களும் உண்டு. (நீண்மதிள் அரங்கத்து அம்மான்) – நீதிவானவன் என்பதுடன் நில்லாமல் நீண்மதிள் அரங்கத்து அம்மான் என்றார். (நீண்மதிள்) – காப்பதற்குப் பூரணமான மதிள்களைக் கொண்ட திருவரங்கம் பெரியகோயிலில் கண்வளர்க்கின்றவனும், அனைவருக்கும் எஜமானனும். (அம்மான்) – இரு அரசர்கள் ஆட்சி செய்தால், ஒருவன் மட்டுமே முழுமையான எஜமானன் என்று எவ்விதம் கூற இயலும்? அதுபோன்று இங்கு திருமலையும், திருவரங்கமும் கூறப்படும்போது, பெரியபெருமாளே எஜமானன் என்று எவ்விதம் கூற இயலும்? திருமலையில் இனிமை நிறைவாக இல்லாத காரணத்தால், மீண்டும் பெரியகோயிலுக்கே வந்து விடுகிறார். (திருக்கமலபாதம்) – அழகு, குளிர்ச்சி, நறுமணம் ஆகிய அனைத்தும் பிறக்கும் இடமாக உள்ள திருவடிகள்.

ஆதித்யனைக் கண்டாலிறே தாமரையலருவது, இத்தாமரைக்கு ஆதித்யன் இவர். பிராட்டி திருமுலைத்தடங்களிலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொள்ளும் திருவடிகள். இவருடைய தளிர்புரையும் திருவடிகளிருக்கிறபடி. (அம்மான் திருக்கமலபாதம்) – தொடர்ந்து வருகைக்கு ப்ராப்தி. (வந்து) – த்வீபாந்தரத்தில் சரக்குச் சேரவேண்டினால் பாதிப்பாதி வழியாகிலும் வருதல், ஒருதலைப்பற்றுதல் செய்யவேணுமிறே, அங்ஙனன்றியே, வந்துனதடியேன் மனம் புகுந்தாய் என்கிறபடியே வழிவந்தானும் தானே, பற்றினானும்தானே என்கிறது. (நீதிவானவன்–கமலபாதம்–என் கண்ணினுள்ளன) – ஸதாதர்சநம் பண்ணுகிறவர்கள் கண்ணுக்கிலக்கானதுகிடீர் என் கண்ணுக்கிலக்காகிறது. வல்லதனை நாளும் விரோதம் பண்ணினேன், போகக்கற்றவாறே என் கண்ணைச் செம்பளித்தேன், தொடர்ந்து வந்து செம்பளித்த கண்ணையுறுத்து உள்ளே புகுந்து நிற்கையாலே என் கண்ணினுள்ளன என்கிறார். அன்றியே தம் கண்ணாலே பார்க்கை அவத்யமென்று கண்ணைச் செம்பளித்தார், கண்ணினுள்ளே ப்ரகாசிக்கத் தொடங்கிற்று.

விளக்கம் – சூரியனைக் கண்டால் தாமரை மலர்வது இயல்பு அல்லவா? தாமரையாகிய எம்பெருமானின் திருவடிகள் மலர்வதற்கான சூரியனாக ஆழ்வார் உள்ளார். இந்தத் திருவடிகள் பெரியபிராட்டி தனது ஸ்தனங்களிலும், திருக்கண்களிலும் ஒற்றிக் கொள்ளும் திருவடிகள் ஆகும். (வந்து) – ஒரு தீவில் உள்ளவர்கள் தங்களுக்கு ஏற்ற பொருள் வேண்டும் என்றால், நாட்டில் உள்ளவர்களைக் கடலில் பாதி தூரம் வரச்சொல்லி, தாங்கள் பாதிதூரம் வந்த, பொருள்களைப் பெறுவர். இங்கு அப்படி இல்லை. பெரிய திருமொழி (3–5–1) – வந்துனதடியேன் மனம் புகுந்தாய் – என்று கூறுவது போன்று, தானாகவே வலிய வந்து, இவரைப் பற்றவும் செய்தான். எப்போதும் தரிசித்தபடி உள்ள நித்யசூரிகளின் கண்களுக்கு இலக்காக உள்ளவன் இன்று என் கண்களுக்கு இலக்கானான். ஆயினும் அதனைக் காணாமல் ஒவ்வொரு நாளும் தகாத செயல்களையே செய்தேன். அது மட்டுமன்றி எனது கண்களை மூடிக் கொள்ளவும் செய்தேன். ஆனால் அவன் மூடிய எனது கண்களை வலியத் திறந்து உள்ளே புகுந்து நின்றான். அல்லது வேறு பொருளும் கூறலாம். அவனைப் பார்க்கத் தனக்குத் தகுதி இல்லை என்று கண்களை மூடிக்கொண்டார், ஆயினும் அவன் மூடிய கண்களின் உள்ளே ப்ரகாசித்தான்.

(ஒக்கின்ற) – ப்ரயோஜநம் இரண்டு தலைக்கும் ஒத்திரா நின்றது. அங்குத்தைக்கு சீலஸித்தி, இங்குத்தைக்கு ஸ்வரூபஸித்தி. (ஒக்கின்ற) – ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாயிருந்ததென்னுதல். என் கண்ணுக்கிலக்கான விடத்திலும் பழைய நிலை குலையாதிருந்ததென்னுதல். ஸம்சாரிகளைப் பார்த்து உங்களுக்கும் ஒக்குமோ வென்கிறாராதல். இந்த லாபம் அத்தலைக்கும் ஒக்குமோவென்கிறாராதல்.

விளக்கம் – (ஒக்கின்ற) – இவர் எம்பெருமானை அடைந்ததன் மூலம் இருவருக்குமே பயன் உண்டானது. இவர் அவனை அடைந்ததன் மூலம், அவனது சீல குணத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் வாய்ப்பு அவனுக்கு உண்டானது. இவருக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டானது. இவர் தன்னுடைய மனதாரக் கண்டதையே, தனது கண்களில் அவன் நின்றான் என்று கூறுகிறார். தாழ்வான் தனது கண்களில் புகுந்த பின்னரும், தனது பழைய பொலிவு மாறாமல் உள்ளான். ஸம்ஸாரிகளிடம் – உங்களுக்கு உங்கள் உலக விஷயத்தில் ஏற்படும் நிலையானது, இந்த உன்னத நிலையை எட்டுமா – என்றார்.

(அமலன்) – உயர்வற உயர் நலம் உடையவன். (ஆதி) – யவன். (பிரான்) – மயர்வற மதிநலம் அருளினான். (அடியார்க்கு) – பயிலும் சுடரொளி. (விண்ணவர்கோன்) – அயர்வறும் அமரர்கள் அதிபதி. (வந்து) – அவர் தொழுதெழு என்றார், இவர்க்கு அவை தானே வந்து நின்றன.

விளக்கம் – (அமலன்) – தன்னை விட உயர்ந்தது என்று ஏதும் இல்லாதவன். (வந்து) – நம்மாழ்வார் அனைவரிடமும், அவனது திருவடிகளைச் சென்று தொழவேண்டும் என்றார். இவருக்கோ அந்தத் திருவடிகள் தாமாகவே வந்து எதிரே நின்றன.

2. உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்து அண்டமுற
நிவர்ந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெம் கணைக் காகுத்தன் கடியார் பொழில் அரங்கத்தம்மான்
சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என் சிந்தனையே.

பொருள் – என்னைத் தனது அடியாராகக் கொண்டதால் மிகவும் மகிழ்வுடன் உள்ளான். மூன்று உலகங்களையும் தனது திருவடியால் அளந்து எடுத்தான். அந்த நேரத்தில், அண்டத்தின் எல்லையை எட்டும்படியாக உயர்த்தியுடைய திருமுடியைக் கொண்டான். முன்பு ஒரு காலத்தில், இராமனாக நின்று, தன்னை எதிர்த்து வந்த அரக்கர்களின் உயிரைத் தன்னுடைய கொடிய அம்புகளால் கவர்ந்தான். இப்படிப்பட்டவன் இன்று அழகான சோலைகள் சூழ்ந்த திருவரங்கத்தில் கண்வளர்கிறான். அவனது அழகான இடுப்பில் கட்டப்பட்ட பீதாம்பரத்தின் மீது என்னுடைய நினைவானது நிலை நின்றது.

## அவதாரிகை

முதற்பாட்டில் அவன் தொடர்ந்து வந்தபடி சொன்னார். இப்பாட்டில் தாம் மேல் விழுந்தபடி சொல்லுகிறார். திருவடிகளிலே தொடர்ந்த திருவுள்ளம் திருப்பரியவட்டத்தின் மேல் சேர்ந்தபடி எங்ஙனேயென்னில், தானறிந்து சேரில் விஷயத்தின் போக்யதைக்குக் குற்றமாம். ஆகையாலே போக்யதை அளவுபட்டதுமல்ல, ஆசை தலைமடிந்ததுமல்ல, கடலோதம் கிளர்தலை கப்புக்கால் உள்ளே கிடந்ததொரு துரும்பு கடலை அளவிட்டலல்லவே கரையேறுவது. ஒரு திரை ஒரு திரையிலே ஏற வீசுமத்தனையிறே.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், அவன் இவரைப் பின் தொடர்ந்து வந்ததைக் கூறினார். இந்தப் பாசுரத்தில், தான் அவன் பக்கம் சென்று விழுந்ததைக் கூறுகிறார். திருவடிகளைக் கூறியபடி இருந்த இவர், திடீரென இடுப்பில் உள்ள ஆடையைப் பற்றிக் கூற வந்தது ஏன்? தானாகவே ஒவ்வொரு பகுதியாகப் பெரியபெருமாளை அனுபவித்திருந்தால், அவற்றின் இனிமைக்குக் குறை ஏற்படலாம். ஆகையால் திருவடிகளின் மீது இவருக்கு இனிமை குறைந்ததால், அடுத்துள்ள ஆடையின் மீது இவர் கண்கள் சென்றது என்பது அல்ல. கடலில் அலைகள் வீசும்போது, அதனுள்ளே உள்ள சிறிய பொருளானது, ஓர் அலையிலிருந்து மற்றோர் அலைக்குத் தள்ளபடும் அல்லவோ? கடல் முழுவதுமாக அறிந்து கொண்ட பின்னரே அந்தப் பொருள் கரையேறும் என்பதல்ல. அதுபோன்று இவரும் பெரியபெருமாளின் என்ற கடலில் சிக்கி, அவனது அழகான உறுப்புகள் என்ற பல அலைகளால் அங்குமிங்கும் தள்ளப்படுகிறார் என்று கருத்து.

## வ்யாக்யானம்

(உவந்தவுள்ளத்தனாய்) – ஆழ்வாரை அகப்படுத்துகையால் வந்த ப்ரீதி, ஸர்வேச்வரனாய் ஸ்ரீய:பதியாய் அவாப்தஸமஸ்த காமனாயிருக்கிறவன் அர்த்தியாய் வந்து, தன் திருவடிகளைத் தலையிலே வையா நின்றால் மதீய மூர்த்தாநம லங்கரிஷ்யதி என்று உகக்க வேண்டியிருக்க, அவையறியாதொழிய ப்ரஜை பால் குடிக்கக்கண்டு உகக்கும் மாதாவைப்போலே உகந்த திருவுள்ளத்தை உடையவனாய். இவற்றைப் பிரிந்தால் வ்யஸநமும் தன்னதேயிறே வ்யஸநேஷு மனுஷ்யாணாம் ப்ருசம் பவதி என்கிறபடியே.

விளக்கம் – (உவந்தவுள்ளத்தனாய்) ஆழ்வாரைத் தனக்கு வசப்படுத்திய காரணத்தால் உண்டான மகிழ்ச்சியில் உள்ளவன். ஸர்வேச்வரனும், பெரியபிராட்டியின் நாயகனும், தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெற்றவனாக உள்ளவனும் ஆகிய பெரியபெருமாள், யாசகம் பெறுபவனாக வந்து தனது திருவடிகளை அனைவர் தலையிலும் வைத்தான். அவ்விதம் வைத்தபோது, ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (31) – மதீயமூர்த்நா மலங்கரிஷ்யதி – உனது திருவடித்தாமரைகள் எப்போது எனது தலையை அலங்கரிக்கப் போகின்றன – என்று ஏங்கிய நிலை நமக்குக் கைகூடியது அல்லவோ? ஆக நாம் அல்லவோ மகிழ வேண்டும்? மாறாக இவன் மகிழக் காரணம் – என்னை இவர்கள் தங்கள் அறியாமல் வெறுக்காமல் இருந்தனரே – என்று எண்ணி, தன்னிடம் பால் குடிக்கும் குழந்தையைக் கண்டு தாய் மகிழ்வது போன்று, இவன் மகிழ்ந்தான். நாம் அவனை

விட்டுப் பிரிந்தால், தன்னுடைய உடைமைகளை இழந்தோம் என்று அவன் அல்லவோ துன்பம் கொள்கிறான்? இராமாயணம் (அயோத்யா காண்டம் 2–40) – வ்யஸநேஷு மனுஷ்யாணாம் ப்ருசம் பவதி – மனிதர்களின் துன்பம் கண்டு, துன்பப்படும் மனிதர்களை விட அதிகமாக இராமன் துயரம் கொள்கிறான் – என்றது காண்க.

(உலகமளந்து) – வகுத்த திருவடிகள் தலையிலே வந்திருந்தாலும் உகக்கவறியாத லோகத்தைக் கிடீர் தானும் விடாதே அளந்தது. உகக்கவறியாமைக்கு வன்மாவையமிறே. குணாகுண நிரூபணம் பண்ணாதே எல்லோர் தலையிலும் ஒக்கத் திருவடிகளை வைத்தபடியாலே, பக்திமான்களும் பாதகிகளும் ஒக்க வாழ்ந்து போய்த்து.

விளக்கம் – (உலகமளந்து) – தங்களது எஜமானன் திருவடிகள் தங்கள் தலையில் வந்து நின்றபோது அதனைக் கண்டு இந்த உலகில் உள்ளவர்கள் உகப்பு அடையாமல் இருந்தனர். இவ்விதம் இவர்கள் உள்ளபோதிலும் – நான் கைவிடமாட்டேன் – என்று உறுதி கொண்டு அல்லவா அளந்தான்? ஏன் உகப்பு அடையாமல் இருந்தனர்? திருவாய்மொழி (3–2–2) – வன்மா – கூறுவது போன்று இந்த உலகத்தினர் மிகவும் வலிமையான மனம் கொண்டவர்களாக உள்ளனர். அவ்விதம் தனது திருவடிகளை வைத்தபோது – நல்லவனா, தாழ்ந்தவனா – என்று ஆராயாமல் அனைவரின் தலையிலும் ஒரே போன்று தனது திருவடிகளை வைத்தான். இதனால் அவன் மீது பக்தி கொண்டவர்கள், பாவம் செய்தவர்கள் என்ற பேதம் இல்லாமல், அனைவரும் சிறப்பான வாழ்வு பெற்றனர்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்